முருகப்பெருமான் துணை

**மகான் சிறுதொண்ட நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.03.2023**, வியாழக்கிழமை

1. யோகஞான மாதவராஜனே
உயிர்கொலை நீக்கி அருளும்
வகையான ஞானம் தந்திடும்
வள்ளலே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது சால் திங்கள்
வரங்களென மூவாறுதிகதி குருவாரம்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 18 ம் நாள் 02.03.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை சிறுதொண்ட நாயனாரும்
அருளுவேன் உலகநலம்பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வலம்வந்து அரங்கனுடன் இருக்க
4. இருக்கவே கலியுக மக்கள்
இணைந்து ஏற்று நன்கு
கருத்தாக அரங்கனை நாடி
கந்தா கடைத்தேற்று என வேண்டி
5. வேண்டியே தீட்சை ஆசிபெற
வினைகள் அனைத்தும் அகன்று
தொண்டராகி சேவை வளர்த்திட
தெரிவிப்பேன் தருமபலம் பெருகி
6. பெருகியே உலக மக்களெல்லாம்
பேதங்களை வென்று இனிதே
குருவருளுடன் திருவருளும் கூடி
குவலயத்தில் ஞானிகளாவர்
7. ஆவரே உலகை மாற்றுகின்ற
அரங்கனின் ஞானப்படைகளாக
புவனம் காக்கும் சக்திகளாக
பிரம்ம சூட்சும பலமும் பெற்று
8. பெற்றுமே அரங்கன் தேர்வுசெய்த
பிரம்ம ஞானிகளாக மாற்றம்
ஆற்றல்பட உலகோர் கண்டு
அறமும் நீதியும் பாதுகாப்பும் நிறைந்த
9. நிறைந்த ஞானலோகம் படைத்து
நிலவுலகில் இயற்கை வளமும்
குறைவிலா தொழில் தனவளமோடு
குருமார்கள் மேலான பக்தி பெருக

10. பெருகவே மானுட சமூகம் தேறி
பிரபஞ்சமே வியக்க மாற்றம்
முருகப்பெருமான் வழிபாடாகி
முழுமையான நிலைகள் கண்டு

11. கண்டுமே உலகில் ஞானஆட்சி
கனிவேலன் தலைமை ஏற்ற
உண்டாகும் ஞானிகள் ஆட்சியாக
உரைத்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–